தலைவர் ரெட்டிபாளையம் ஊராட்சி அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திரு.R.ஈஸ்வரமூர்த்தி

ந.க.எண்.01/2024 நாள்: 09.10.2024

பொருள்: குடியிருப்பு மனைப்பிரிவு - திருப்பூர் மாவட்டம், - ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியம் - ரெட்டிபாளையம் கிராம ஊராட்சி - கிராம ரீச.எண்.112/3A1B1A & 113/2A2 ல் 3.63 ஏக்கர் (அ) 14696.00 சமீ பரப்பளவில் அமையும் **"ஸ்ரீ வெற்றிவேல் கார்டன்"** குடியிருப்பு மனைப்பிரிவு வரைபட ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை எண். 71, ஊரக வளர்ச்சி துறை நாள்: 16.06.2003.
2. அரசாணை எண். 79 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3)இ நாள்: 04.05.2017.
3. அரசாணை எண். 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி (1) துறை நாள்: 04.02.2019
4. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.1353/2018/எல்.ஏ2 நாள்.16.08.2018.
5. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 13686/2017/எல் ஏ2 நான்.08.09.2017,
6. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.12201/2017/சிபி நாள்.28.09.2017.
7. மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் (பொ) திருப்பூர் மாவட்டம் அவர்களின் அலுவலக இணையவழி விண்ணப்ப எண் : 317QRMMV நாள். 29.05.2024.
8. ரெட்டிபாளையம் ஊராட்சி தீர்மான எண். 48, நாள்.09.10.2024.

உத்தரவு:

திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியம், ரெட்டிபாளையம் ஊராட்சி ரீச.எண்.112/3A1B1A & 113/2A2 ல் 3.63 ஏக்கர் (அ) 14696.00 சமீ பரப்பளவில் உள்ள பூமியில் 81 வீட்டு மனைகள் என பிரிக்கப்பட்டு பூங்காவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது இடத்தையும் சாலைகளையும் தானப் பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்ய வேண்டும் என்ற மனைப்பிரிவு நிபந்தனை எண். 3 ன் படி ஒப்படைக்கப்பட்டுள்ளதையடுத்து குடியிருப்பு மனைப்பிரிவு அமைத்துக் கொள்ள பார்வை (7) ல் காணும் மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் (பொ), திருப்பூர் மாவட்டம் அவர்களின் அனுமதியின் படி ஊராட்சி மற்றும் அரசுக்கு செலுத்தி வேண்டிய கட்டணங்கள் யாவும் செலுத்தப்பட்டு பார்வை (8) ல் காணும் ரெட்டிபாளையம் ஊராட்சி தீர்மானத்தின் படியும் மற்றும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு திரு.M.K.T.சுரேஷ் மற்றும் 3 நபர்களுக்கு மனைப்பிரிவு வரைபட அனுமதி வழங்கப்படுகிறது.

தலைவர்,
ரெட்டிபாளையம் ஊராட்சி.

ரெட்டிபாளையம் ஊராட்சி மன்றம்

கூட்ட நடவடிக்கைகளின் நகல்

2024-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 09 ஆம் நாள் (09.10.2024) புதன் கிழமை காலை 11 மணிக்கு ரெட்டிபாளையம் ஊராட்சியின் சாதாரண கூட்டம். தலைவர் திரு.R.ஈஸ்வரமூர்த்தி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் :

தலைவர்: திரு.R.ஈஸ்வரமூர்த்தி வருகை உறுப்பினர்கள் : 6

பொருள்-4	தீர்மானம்- 48
ரெட்டிபாளையம் ஊராட்சி, ரெட்டிபாளையம் கிராமம், ரீச.எண்.112/3A1B1A & 113/2A2 ல் 3.63 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தில் திரு.M.K.T.சுரேஷ் த/பெ.தாண்டப்பகவுண்டர், கதவு எண். 4/148ஏ, சேடர்பாளையம், வாவிபாளையம் அஞ்சல், நெருப்பெரிச்சல் கிராமம், திருப்பூர் வட்டம், திருப்பூர் மாவட்டம் மற்றும் 3 நபர்களுக்கு சொந்தமான தற்காலம் **"ஸ்ரீ வெற்றிவேல் கார்டன்"** எனப் பெயரிடப்பட்டுள்ள குடியிருப்பு மனைப் பிரிவிற்கு திருப்பூர் மாவட்ட ஊரமைப்புத் துணை இயக்குனர் அவர்களின் திட்ட அனுமதி இணைய வழி விண்ணப்ப எண் : 317QRMMV நாள். 29.05.2024 ன் படி வழங்கப்பட்ட கொள்கை ஒப்புதலின் பெயரில் ஊராட்சிக்கு ஒப்படைக்க வேண்டிய பூங்கா மற்றும் சாலைகள் ஒப்படைக்கப்பட்டு உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் 29.05.2024 தேதியில் SWP/DTCP/TIRUPPUR/LAYOUT NO : 176/2024 - ன் படி ஒப்புதல் வழங்கப்பட்டு ஊராட்சி மற்றும் அரசுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் யாவும் செலுத்தப்பட்டுள்ளதால் இக்குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்க மன்றம் தீர்மானிக்கும் விஷயம்.	இக்குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்கப்படுகிறது.

(உண்மைநகல்)

(ஒப்பம்)

தலைவர்,
ரெட்டிபாளையம் ஊராட்சி.

இடம் : ரெட்டிபாளையம்

நாள் : 09.10.2024